THE HINDU
Region

# Security stepped up ahead of PM's visit tomorrow

The visit, timed just days before the announcement of Assembly polls by the Election Commission of India, has raised expectations as the first NDA government in the U.T. would be seeking a second term. Government sources said the administration was working closely with the Prime Minister's Office in planning the PM's programme

Rajesh B Nair
PUDUCHERRY

Ahead of the 2026 Assembly polls in the Union Territory, Prime Minister Narendra Modi will make a crucial visit to Puducherry on Sunday under the tight security cover provided by territorial police and law enforcement agencies of the Central government.

As per details available with government agencies in Puducherry, Mr. Modi will reach Puducherry airport from Chennai around noon. He will participate in an-hour-long government programme at the helipad near the airport and return to Chennai around 1.30 p.m. The airport and the programme venue at Lawspet helipad have already come under surveillance of the police and the agencies entrusted with the Prime Minister's security.

"The PM's security liaison team has already reached Puducherry. Surveillance across the region has been stepped up with the deployment of several police personnel, including plainclothesmen. Various security agencies are involved in the surveillance and monitoring," said a police officer.

Hundreds of policemen will be deployed on the day of Prime Minister's arrival for crowd and traffic management. Though Mr. Modi's visit was purely official, considering the large mobilisation of workers from across Puducherry by the ruling BJP, the police are working out a traffic management plan for the day. Around 4,000 newly-recruited government staff and over 1,000 youth selected by private companies at a recent job fair held at Lawspet are also expected to attend the programme.



The airport and the programme venue at Lawspet helipad have already come under surveillance of the police and the agencies entrusted with the Prime Minister's security.

### 'No fly zone' declared

Based on a request made by Superintendent of Police (Security), Puducherry, District Collector has already declared areas in Puducherry and Oulgaret Municipalities as 'No Fly Zone' prohibiting flying of aviation devices including UAV, drones, etc., on Sunday.

"Any person violating the order will be liable for penal action under the provisions of the Bharatiya Nagarik Suraksha Sanhita and other relevant provisions of law," the Collector said in the order.

### High expectations

The visit, timed just days before the announcement of Assembly polls by the Election Commission of India, has raised expectations as the first National Democratic Alliance government in the Union Territory would be seeking a second term. Sources in the government said, the administration was working closely with the Prime Minister's Office to schedule the programme of Mr. Modi.

The Prime Minister will virtually inaugurate certain completed works, including Smart City schemes, Regional Cancer Centre at Jipmer, new buildings at NIT, Karaikal and other infrastructure projects.

Mr. Modi will also virtually participate in a few programmes of Auroville, said an official.

"The Prime Minister will lay the foundation for dozens of projects, the execution of which is expected to run into crores. Important announcements in the sectors of transportation and healthcare are also expected. The visit by the Prime Minister will be a landmark as there could be announcements related to Puducherry's long-term development," said a senior BJP leader.

இந்து தமிழ் திசை

மதுரை, புதுச்சேரிக்கு

# பிரதமர் மோடி நாளை வருகை

## திருப்பரங்குன்றத்தில் தரிசனம் செய்கிறார்

மதுரை / புதுச்சேரி

மதுரை, புதுச்சேரியில் நாளை (மார்ச் 1) நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் பிரதமர், திருப்பரங்குன்றம் கோயிலுக்கும் செல்கிறார்.

இதையொட்டி, இன்று மாலை டெல்லியில் இருந்து சென்னை வரும் பிரதமர் மோடி இரவு சென்னையில் தங்குகிறார். காலையில் புதுச்சேரியில் நடைபெறும் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் ஹெலிகாப்டரில் பிற்பகல் 2.45 மணியளவில் தஞ்சாவூர் செல்கிறார். அங்கிருந்து விமானத்தில் புறப்பட்டு 3.30 மணியளவில் மதுரை வருகிறார்.

மதுரை விமான நிலைய வளாகத்தில் வான் கட்டுப்பாட்டு கோபுரத்தை திறந்து வைக்கும் பிரதமர், புதுப்பிக்கப்பட்ட ரயில் நிலையங்கள், பரமக்குடி - ராமநாதபுரம் நான்கு வழிச் சாலை திட்டங்களை காணொலி வாயிலாகத் திறந்து வைக்கிறார். மாலை 4 மணியளவில் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சுவாமி தரிசனம் செய்கிறார்.

மாலை 4.30 மணியளவில் மண்டேலா நகரில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணி தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். இதில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், பாமக தலைவர் அன்புமணி, அமமுக பொதுச் செயலாளர் டிடிவி. தினகரன், தமாகா தலைவர் ஜி.கே.வாசன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

பொதுக்கூட்டம் முடிந்து மதுரை விமானம் நிலையம் சென்று, அங்கிருந்து மாலை 6.10 மணியளவில் விமானத்தில் டெல்லி புறப்பட்டுச் செல்கிறார்.

மண்டேலா நகரில் நடைபெறும் தேர்தல் பிரச்சார கூட்டத்துக்காக பிரம்மாண்ட மேடை மற்றும் பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது. பிரதமர் வருகையையொட்டி 20 எஸ்.பி.க்கள், 13 ஏடிஎஸ்பிக்கள், 35 டிஎஸ்பிக்கள் மேற்பார்வையில் 7 ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

### புதுச்சேரியில் நலத் திட்டங்கள்

முன்னதாக, சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் புதுவைக்கு நாளை காலை 11:40 மணிக்கு பிரதமர் மோடி வருகிறார். அவரை துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், முதல்வர் ரங்கசாமி உள்ளிட்டோர் வரவேற்கின்றனர். பின்னர், கார் மூலம் விழா நடைபெறும் லாஸ்பேட்டைக்கு வந்து, அரசு நலத் திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசுகிறார்.

பிரதமர் வருகை முன்னிட்டு, மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணிகள் நடந்துவருகின்றன. மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு படையினர் மற்றும் அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

புதுச்சேரி சேதராப்பட்டில் 50 ஏக்கரில் ரூ.1,100 கோடியில் ஜிப்மர் மருத்துவமனையின் மேம்பட்ட விபத்து சிகிச்சை மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையம் கட்டும் அறிவிப்பை பிரதமர் மோடி வெளியிடுகிறார்.

பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிவிப்பில், "புதுச்சேரியில் ரூ.2,700 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைக்கும் பிரதமர், பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

# ரூ.2,700 கோடிக்கு புதிய திட்டங்களை துவக்கி வைக்கிறார்




புதுச்சேரிக்கு பிரதமர் மோடி வருகையையொட்டி லாஸ்பேட்டை ஹெலிபேட் மைதானத்தில் கவர்னர் கைலாஷ்நாதன் தலைமையில் அமைச்சர் நமச்சிவாயம் மற்றும் அதிகாரிகள் ஆய்வு நடத்தினர்.

பெறும் லாஸ்பேட்டை ஹெலிபேடு மைதானத்துக்கு வருகிறார். அங்கு ரூ.2,700 கோடிக்கு உள்கட்டமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, தொழில் மேம்பாடு, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி திட்டங்களை துவக்கி வைக்கிறார். மேலும், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையம், நலிவடைந்த பிரிவினருக்கான குடியிருப்புகள், காரைக்காலில் உள்ள தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் அரங்கம், கங்கா விடுதி, ஜிப்மரில் உள்ள பிராந்திய புற்றுநோய் மையத்தின் நவீனமயமாக்கல், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் புதிய இணைப்பு கட்டிடங்கள், விரிவுரை அரங்குகள் மற்றும் விடுதிகள் ஆகியவற்றை திறந்து வைக்கிறார். தொடர்ந்து 750 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள கரசூர்-சேதராப்பட்டு தொழிற்பேட்டையில் மருந்தக பூங்கா, ஜவுளி பூங்கா, ஐடி பூங்கா, ஐஐடி மெட்ராஸின் அதிநவீன ஆராய்ச்சி மையம் ஆகியவைகள் அமைக்க அடிக்கல் நாட்டுகிறார். சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்கல், பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா திட்டத்தின் கீழ் 41 கிராமப்புற சாலைகள் கட்டுமானம், சுகாதாரத்துறைகளில் பல்வேறு திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார். மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கான சிறப்பு உதவி திட்டத்தின் கீழ் நகர்ப்புற சாலைகள், வடிகால் அமைப்புகள், பொது கட்டிடங்கள், மாணவர் விடுதிகள் மற்றும் விளையாட்டு வசதிகள் போன்ற முக்கிய துறைகளை உள்ளடக்கிய பல்வேறு திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டி சிறப்புரை ஆற்றுகிறார்.

பின்னர் மதியம் 12.50க்கு விமானம் நிலையம் திரும்பி, அங்கிருந்து மதுரை செல்கிறார். பிரதமர் வருகையையொட்டி ஹெலிபேடு மைதானத்தில் மேடையும், பார்வையாளர்கள் அமர வசதியும் செய்யப்பட்டு வருகிறது. பிரதமரின் வருகையையொட்டி சிறப்பு பாதுகாப்பு படையினர் புதுச்சேரிக்கு வருகை தந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்து வருகின்றனர்.

தினமணி

# பிரதமர் மோடி நாளை புதுச்சேரி வருகை: சிறப்பு பாதுகாப்புப் படை கட்டுப்பாட்டில் மைதானம்

**புதுச்சேரி, பிப். 27:** புதுச்சேரிக்கு ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 1) பிரதமர் நரேந்திர மோடி வருகையை முன்னிட்டு, சிறப்புப் பாதுகாப்பு படை கட்டுப்பாட்டில் விமான நிலையம் அருகே அமைக்கப்பட்டு வரும் மேடையும், மைதானமும் கொண்டு வரப்பட்டுள்ளது.

புதுச்சேரிக்கு மார்ச் 1-ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி வருகிறார். முன்னதாக சனிக்கிழமை (பிப். 28) தனி விமானம் மூலம் சென்னைக்கு வரும் அவர், இரவு மக்கள் பவனில் தங்கி ஓய்வு எடுக்கிறார்.

பிரதமர் மோடி சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் புதுச்சேரிக்கு ஞாயிற்றுக்கிழமை காலை 11.40 மணிக்கு வருகிறார்.

விமான நிலையத்தில் அவரை துணைநிலை ஆளுநர் கே. கைலாஷ்நாதன், முதல்வர் என். ரங்கசாமி, அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் வரவேற்கின்றனர்.

பின்னர் அங்கிருந்து காரில் விழா நடைபெறும் லாஸ்பேட்டை ஹெலிபேடு மைதானத்துக்கு பிரதமர் மோடி செல்கிறார்.

அங்கு அரசு நலத் திட்டங்களைத் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார். இதையடுத்து நண்பகல் 12.40 மணிக்கு விமானம் மூலம் மதுரைக்கு செல்கிறார்.

பிரதமர் மோடி வருகையையொட்டி புதுச்சேரி ஹெலிபேடு மைதானத்தில் மேடை அமைக்கும் பணி, பார்வையாளர்கள் அமர்வதற்கான வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

பிரதமரின் சிறப்புப் பாதுகாப்புப் படையினர் புதுச்சேரிக்கு வந்துள்ளனர். அவர்கள் பிரதமர் உரையாற்றும் விழா மேடையைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் அ. குலோத்துங்கன் சிறப்புப் பாதுகாப்பு படையினருடன் ஆலோசனை நடத்தினார்.

இதையடுத்து லாஸ்பேட்டை ஹெலிபேடு மைதானம் சிறப்புப் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி சேதராப்பட்டில் 50 ஏக்கரில் ரூ. 1,100 கோடியில் ஜிப்மர் மருத்துவமனையின் மேம்பட்ட விபத்து சிகிச்சை மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையம் கட்ட அறிவிப்பை வெளியிடுகிறார்.

புதுச்சேரி முழுக்க 30 ஆண்டுகளுக்கு மேலாக பழைமையான குடிநீர் குழாய்களை அகற்றிவிட்டு புதிய குழாய்களைப் பதிக்கும் திட்டம், விமான நிலைய விரிவாக்கம், கல்லூரிகள் மறுசீரமைப்பு, உப்பளம் இந்திரா காந்தி விளையாட்டு அரங்கில் செயற்கை ஓடுதளபாதை மற்றும் நீச்சல் குளம் திறப்பு உள்ளிட்ட திட்டங்களை தொடங்கி வைக்கவுள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி புதிய திட்டங்களையும், புதுச்சேரிக்கான சிறப்பு அறிவிப்பையும் வெளியிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.